# தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மே தின விழாவில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ பங்கேற்பு!

### சிறப்புப் பேச்சாளராக கலந்துகொள்கின்றார்



தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., கிளிநொச்சியில் நடைபெறும் தமிழர் ஐக்கிய மே தின ஊர்வலத்தில் பங்கேற்பதுடன் தமிழ்த் தேசிய மே தின விழாவில் சிறப்புப் பேச்சாளராக கலந்துகொள்கின்றார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் அழைப்பை ஏற்றே மனோ எம்.பி. கிளிநொச்சி வருகின்றார்.

இது தொடர்பில் மனோ எம்.பி. ஊடகங்க ளிடம் மேலும் தெரிவித்த தாவது:-

2➤

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 17 செவ்வாய்க்கிழமை 30.04.2024 கதிர் 245

# சுதந்திரக் கட்சி ஆறேழு துண்டுகளாக பிளவுபட்டுள்ளது! நாட்டில் படித்த அரசியல்வாதிகள் இல்லாதது அவலமாகும்

### மக்களின் போராட்டச் சிந்தனை இன்னமும் மாறவில்லை என்கிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க



ஜனாதிபதி தேர்தலில் கட்சியினால் முன்வைக்க வேட்பாளர் எவரும் இல்லை எனவும், கட்சி தற்போது ஆறு அல்லது ஏழு துண்டுகளாக பிளவுபட்டுள்ளதாகவும், இதன் காரணமாக கட்சி பூச்சிய நிலைக்கு வீழ்ந்துள்ளதாகவும் சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் போசகர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று (29) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற இந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேலும் தெரிவித்த அவர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் எந்த பதவியையும் ஏற்கப்போவதில்லை எனவும், பின்புலமாக இருந்து கட்சியை சரியான பாதையில் கொண்டு செல்வேன் எனவும் குறிப்பிட்டார். தனது தந்தை மிகவும் துன்பங்களை அனுபவித்து கட்டியெழுப்பிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேனவால் அழிக்கப்பட்டுள்ளதாகவும்

2➤

# ஐக்கிய மக்கள் சக்தியின் மே தின பேரணி வரலாற்றுச் சிறப்புமிக்கதாக அமையுமாம்!

### ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் பங்குபற்றுவர் என்கிறார் முன்னாள் எம்.பி. முஜிபுர் ரஹ்மான்



ஒரு லட்சத்திற்கும் அதிகமான ஆதரவாளர்கள் பங்குபற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் மே தின பேரணியை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது தயார்நிலையில் உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே முன்னாள் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

"ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக நாடாளுமன்றத்தில் மூன்று நாள் விவாதம் நடைபெற்றது. அந்த விவாதத்தில், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்தாத ஆளும்கட்சி உறுப்பினர்கள் கர்தினால் மெல்கம் ரஞ்சித் அவர்களையே சாடினார்கள். அத்துடன்,

2➤

# ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் மே 4, 5 இல் இலங்கைக்கு வரவுள்ளார்



ஜப்பானிய வெளி விவகார அமைச்சர் யோக்கோ கமிகாவா மே மாதம் 4 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள் ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ்குணவர்தன ஆகியோரை ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் சந்திக்கவுள்ளார். அத்துடன், ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவினர், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடனும்

2➤

# ஆசிய கடல் பிராந்திய பாதுகாப்பிற்காக அவுஸ்திரேலிய வழங்கவுள்ள விமானம்

இலங்கை உட்பட ஆசிய கடல் பிராந்தியத்தின் பாதுகாப்பிற்காக விமானமொன்றை வழங்க அவுஸ்திரேலியா முன்வந்துள்ளது.

சட்டவிரோத குடியேற்றங்களை தடுப்பது உள்ளிட்ட இலங்கையின் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு முதற்கட்டமாக இந்த விமானம் வழங்கப்படவுள்ளதாக அவுஸ்திரேலிய வெளிவிவகார மற்றும் வர்த்தக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த வெளிவிவகார மற்றும் வர்த்தகத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் தென்கிழக்காசிய பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொறுப்பாளர் லோக்கம் மிட்செல் செங், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவைச் சந்தித்த போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது.

ஆசிய பிராந்தியத்தின் பாதுகாப்பு குறித்து தமக்கு அதிக அக்கறை உள்ளதால், கூடிய விரைவில் குறித்த விமானத்தை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ரெசி-140)

# மே தின பேரணிகளை நடத்துவதற்காக கட்டணம் செலுத்தி பல மைதானங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன

### கொழும்பு மாநகர சபையின் நகர ஆணையாளர்



ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் கொழும்பில் மே தின பேரணிக் கொண்டாட்டங்களுக்காக கட்டணம் செலுத்தி மைதானங்களை ஒதுக்கியுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் நகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன தெரிவித்தார்.

மே தினக் கொண்டாட்டங்களுக்காக சுமார் 5 லட்சம் பேர் கொழும்புக்கு வருவார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், அந்த மக்களுக்கு தேவையான சுகாதார உதவிகள் மற்றும் திடீர் தீ பிடித்தல் சம்பவங்களின் போது தீயை அணைத்தல் போன்ற தேவையான அவசர உதவிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மாநகர சபை மேற்கொள்ளும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மே தினத்துடன் இணைந்ததாக ரணசிங்ஹ பிரேமதாச, டி.பி. இளங்கரத்ன,

2➤

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இரண்டு பொறியியலாளர்கள் மாத்திரமே பணியில் உள்ளனர்!

### ஒருவர் பதவி விலகினாலும் கூட்டுத்தாபனத்திற்கு மூடு விழா தானாம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இரண்டு பொறியியலாளர்கள் மாத்திரமே பணியில் உள்ளதாகவும் அவர்களில் ஒருவர் பதவி விலகிச் சென்றாலும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை மூட வேண்டிய நிலையே ஏற்படும் என பொது நிறுவனங்கள் தொடர்பான குழு (கோப்) அண்மையில் தெரிவித்துள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரிகள் அண்மையில் 'கோப்' குழுவிற்கு அழைக்கப்பட்ட போது அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே இந்த உண்மைகள் வெளியாகியுள்ளன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தொடர்ந்து நஷ்டத்தை சந்தித்து வருவதால், அக் கூட்டுத்தாபனத்தின் மூலம் எந்தவொரு பணியையும் இலவசமாக செய்ய வேண்டாம் என 'கோப்' குழுவின் தலைவர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கு

2➤

## சுதந்திரக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் தெரிவித்தார். மே தினப் பேரணியில் பங்கேற்பதில் தனக்கு ஆர்வம் இல்லை எனவும், எனினும் எதிர்காலத்தில் பெருமளவில் மக்கள் கூட்டத்தை கூட்டி பேரணியொன்றை நடத்தி மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்த காத்திருப்பதாகவும் சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

மேலும் உரையாற்றிய அவர், “கடந்த காலங்களில் என்னைப் பற்றி பலர் கூறியது அப்பட்டமான பொய். இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடைசி துளி வரை வீழ்ந்துள்ளது. அது ஆறு அல்லது ஏழு துண்டுகளாக உடைந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும் இரண்டாக பிளவுபட்டுள்ளது. 2015க்கு பிறகு அரசியலிலிருந்து விலகிவிட்டேன். ஆனாலும், சமூக சேவைப் பணிகளைச் செய்து வந்துள்ளேன். இந்த நாட்டில் தெளிவான தலைமை இல்லை என்பதை 2019 க்குப் பின்னர் நான் உணர்ந்தேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தவாறு மஹிந்த ராஜபக்ஷவும் மைத்திரிபால சிறிசேனவும் எனக்கு எதிராக செயற்பட்டனர், 2019 இல் கட்சியிலிருந்து நீக்கப்பட்டேன். எனது கட்சி அமைப்பாளர்கள் நாற்பது பேர் நீக்கப்பட்டனர். இப்படி அநியாயங்கள் நடக்கும் போது அதைப்பற்றி கேட்காதவர்கள் இப்போது ‘கம் மேடம், கம் மேடம்’ என்று என்னை அரசியலுக்கு வருமாறு அழைக்கின்றனர். நாடாளுமன்றத்திலும், மாகாண சபையிலும், பிரதேச சபையிலும் நேர்மையான, படித்த அரசியல்வாதிகள் இல்லாதது இந்த நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பெரும் அவலமாகும். எந்தவொரு அரசாங்கம் அமைந்தாலும் அதை திருத்த முடியாதவாறு அரசியலை வியாபாரமாக ஆக்கியுள்ள பலரே இன்று அரசியலில் உள்ளனர். நேர்மையானவர்கள் குறைவு. இவற்றை பொறுக்க முடியாத நிலையிலேயே இளைஞர்களால்காலிமுகத்திடல் போராட்டம் தொடங்கியது. இந்த போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்களில் பெரும்பாலானோர் படித்தவர்கள். அவர்களில் பலரை நான் சந்தித்தேன். அவர்களில் வழக்கறிஞர்கள் மற்றும் பொறியியலாளர்கள் இருந்தனர். புதியதொரு தலைமை வேண்டும் என்ற நோக்கத்திலேயே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆனால், நாளடைவில் அந்த போராட்டம் வேறு திசைக்கு திரும்பியது. திடீரென ஒரு கும்பல் இந்த போராட்டத்தை தவறான பாதைக்கு கொண்டு சென்றது.

ஆனால், இந்நாட்டில் 80 வீதமான மக்கள் இன்னமும் அந்த போராட்ட சிந்தையுடன் தான் இருக்கின்றார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். இனியொரு போராட்டத்திற்கு இடமே இல்லை என்பது போல் நமது வருங்கால அரசியல்வாதிகள் அரசியல் செய்கிறார்கள். அவர்களுக்கு உண்மை புரியாதது மிகவும் வருந்தத்தக்கது. அவர்கள் மக்களின் கருத்துக்களை மதிப்பதில்லை.

இத்தகைய நிலையில் சுதந்திர கட்சி எவ்வாறான திசையில் செல்கின்றது என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். சிலவேளை கட்சியின் நலன் கருதி சில பொறுப்புகளை நான் ஏற்கவும் கூடும். என்னால் மக்களிடம் அடிவாங்காமல் தெருக்களில் நடந்து செல்லக் கூடிய நிலையே உள்ளது. (ரெசி-135)

## ஐக்கிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் எதிர்க்கட்சிகள் எழுப்பிய கேள்விகளுக்கு அரசாங்கம் பதிலளிக்கவில்லை. எதிர்க்கட்சி எழுப்பிய கேள்விகளுக்கமைய, ஈஸ்டர் தாக்குதல்தொடர்பான விசாரணையை முன்னெடுப்பதில் அரசாங்கம் நேர்மையாக செயற்படவில்லை.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் மே தின பேரணியை கொழும்பில் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன. மே தின பேரணிக்கு 1 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி, நமது மே தின பேரணி குணசிங்ஹபுர மைதானத்திலிருந்து பிற்பகல் 1 மணிக்கு ஆரம்பமாகும். இந்த மே தினப் பேரணி வரலாற்றுச் சிறப்புமிக்க மே தினப் பேரணியாகவும் அமையும். அதற்காக கட்சி அமைப்பாளர்களும் கட்சித் தலைவர்களும் உழைத்து வருகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி வெற்றிகரமான மே தினக் கூட்டத்தை நடத்தி சாதனை படைக்கவுள்ளது. அதற்காக அனைத்து ஜனநாயக சக்திகள் மற்றும் மக்க ளுக்கு அழைப்பு விடுக்கின்றோம்” என றார். (ரெசி-136)

## ஆசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உத்தியோகபூர்வ பேச்சுக்களை நடத்தவுள்ளனர். ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரின் இந்த விஜயத்தின் போது அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெசி-137)

## மேதின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏ.ஈ. குணசிங்க ஆகியோரின் உருவச்சிலைகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்ஹ பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு மாளிகாவத்தையிலும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச பிற்பகல் ஒரு மணிக்கு கொழும்பு செத்தம் வீதியிலும் பேரணிகளை நடத்தவுள்ளதுடன், மக்கள் விடுதலை முன்னணியின் பேரணிகள் கொழும்பு, யாழ்ப்பாணம், மாத்தறை, அனுராதபுரம் ஆகிய நகரங்களில் நடைபெறவுள்ளதுடன், அக்கட்சியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க கொழும்பில் நடைபெறும் பேரணியில் கலந்து கொள்வார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், முன்னிலை சோஷலிச கட்சியின் மே தின பேரணியை மருதானை எல்பின்ஸ்டன் பகுதியில் நடத்தவுள்ளதுடன், சுதந்திர வர்த்தக வலய சங்கம் கொழும்பு விகாரமஹா தேவி பூங்காவிற்கு அருகாமையிலும், வங்கி ஊழியர் சங்கம் அலறி மாளிகைக்கு அருகாமையில் மே தின நிகழ்வுகளை நடத்தவுள்ளதுடன், இன்னும் பல சிறு கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் கொழும்பு நகர எல்லைக்குள் மே தினக் கொண்டாட்டங்களை நடத்தவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(ரெசி-139)

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன் போது ஆலோசனை வழங்கினார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கொழும்பின் மத்தியில் அமைந்துள்ள கட்டிடங்களுடன் கூடிய 120 பேர்ச்சஸ் காணியை வர்த்தக நிறுவனமொன்றை அமைப்பதற்கென இருபது வருட குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், எனினும் அக்கட்டிடம் மற்றும் காணி தொடர்பான ‘வற்’ வரியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமே இன்று வரையில் செலுத்தி வருகின்ற உண்மை தெரியவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரெசி-138)

## தமிழரசு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் வே.இராதாகிருஷ்ணன் எம்.பி., தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதிநிதியாக கொழும்பில் நடைபெறும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் மே தின விழாவில் கலந்துகொள்கின்றார். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் எம். பி. தலவாக்கலையில் நடைபெறும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொள்கின்றார்.

மேல், சப்ரகமுவ, தென் மாகாணங்களில் உள்ள நமது கட்சி அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரை கொழும்பில் நடைபெறும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் மே தின விழாவில் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றேன். மத்திய, ஊவா மாகாணங்களில் வாழும் நமது கட்சி அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரை தலவாக்கலையில் நடைபெறும் மே தினக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றேன்.

கிளிநொச்சி, வன்னி உட்பட வடக்கு மாகாணத்தில் வாழ்கின்ற நமது கட்சி அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரை கிளிநொச்சியில் நடைபெறும் தமிழர் ஐக்கிய மே தின ஊர்வலத்திலும் மற்றும் தமிழ்த் தேசிய மே தின விழாவிலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றேன்.” - என்றார். (அ)

# பாட்டியின் மாத்திரை எமனானது பேத்திக்கு

நுவரெலியா, ஸ்கிராப் தோட்டத்தில் பாட்டியின் அரவணைப்பில் வாழ்ந்து வந்த 15 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர், இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் மாத்திரைகளை அளவுக்கு அதிகமாக உட்கொண்டதால் உயிரிழந்துள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி பாட்டி வீட்டில் இல்லாத நேரத்தில் பாட்டி பயன்படுத்தி வந்த இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் மாத்திரைகளை மேற்படி மாணவி அதிக அளவில் உட்கொண்டு மயக்கமுற்ற நிலையில் அயலவர்களின் உதவியுடன் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த 27 ஆம் திகதி உயிரிழந்துள்ளார். மேற்படி மாணவியின் தாய் சிறு வயதில் உயிரிழந்த நிலையில் தந்தை வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு நானுஓயா பிரதேசத்தில் தனியாக வாழ்ந்து வந்துள்ளார். எனினும், மேற்படி மாணவி உயிரிழந்த சம்பவம் தந்தைக்குத் தெரியாத நிலையில் நுவரெலியா பொலிஸாரின் உதவியுடன் தந்தையைத் தேடி பிரேத பரிசோதனையின் பின் சடலம் நேற்று தந்தையிடம் ஒப்படைக்கப்படுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் மேற்படி மாணவி, இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் மாத்திரைகளைத் தானாகவே அதிக அளவில் உட்கொண்டாரா? அல்லது வேறு யாரேனும் அவருக்குத் தெரியாமலேயே அதிக அளவில் மாத்திரைகளைக் கொடுத்தனரா? போன்ற பல கோணங்களில் மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# நாராயணப்பிள்ளை நாகேந்திரன் எழுதிய நாட்டார் வழக்காறுகள் நூல் வெளியீட்டு விழா



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பங்கேற்புடன் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகமும் கலாசார பேரவை மற்றும் கலாசார அதிகார சபையும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த எழுத்தாளரும், ஓய்வுபெற்ற அதிபருமான நாராயணபிள்ளை நாகேந்திரன் எழுதிய நாட்டார் வழக்காறுகள் எனும் நூலின் வெளி யீட்டு விழா மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரெட்ணம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் பிரதம அதிதியாகவும், சிவஸ்ரீ சண்முகம் மயூரவதன குருக்கள் பிரதம குருவாகவும், களுவாஞ்சிகுடி முகாமை ஆலய பரிபாலனசபைத் தலைவர். கந்தவேல மற்றும் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கணேஷன் மதிசீலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாவும், களுதாவளை மகா வித்தியாலய அதிபர் கணபதிப்பிள்ளை சத்தியமோகன் மற்றும் களுதாவளை வினாயகர் வித்தியாலய அதிபர் நாராயணப்பிள்ளை நடேசன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.



# கல்முனை பொது நூலகத்தில் ரமழான், புத்தாண்டு நிகழ்வு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ரமழான் நோன்புப் பெருநாள் மற்றும் சித்திரைப் புத்தாண்டு என்பவற்றை முன்னிட்டு கல்முனை பொது நூலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கொண்டாட்ட நிகழ்வு நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

நூலகர் ஏ.எல்.எம். முஸ்தாக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, நிர்வாகப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரான என். பரமேஸ்வர வர்மன் ஆகியோரும் அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.

இதன்போது பண்டிகைகளை சிறப்பிக்கும் வகையில் நூலக உத்தியோகத்தர்களினால் தயாரிக்கப்பட்டிருந்த பலகாரங்களைக் கொண்ட விருந்துபசாரமும் இடம்பெற்றது.






# விவசாயத் திணைக்களத்தின் ஒருங்கிணைந்த விழிப்பூட்டல்

(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஒருங்கிணைந்த விழிப்பூட்டல் நிகழ்வு பாலையடிவட்டை விவசாய போதனாசிரியர் பிரிவிலுள்ள வம்மியடியூற்று கிராமத்தில் நேற்று முன்தினம் (28) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பாலையடிவட்டை விவசாய போதனாசிரியர் ரீ.கோபி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம். பரமேஸ்வரனும் அவரோடு பாடவிதான உத்தியோகத்தர்களான லக்ஸ்மன் மற்றும் மாறன், கிராம சேவை உத்தியோகத்தர், தெற்கு வலய விவசாய போதனாசிரியர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய அமைப்புகள் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாமரங்கள் மற்றும் பல பழமரங்களின் கத்தரித்தல், பழக்கப்படுத்தல், பசளைப்பிரயோகம், விவசாய இரசாயனங்களின் முறையான பயன்பாடு, கொடித்தோடை நடுகை மற்றும் பராமரிப்பு என்பன பற்றிய செய்துகாட்டல்கள் விவசாய போதனாசிரியர்களால் தெளிவூட்டப்பட்டதுடன் விவசாய திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கௌபி அறுவடையும் இடம்பெற்றது.

விவசாயிகளுடனான கலந்துரையாடலில் விவசாயிகளின் பிரச்சினைகள் கேட்டறியப்பட்டு அதற்கான தீர்வுகளை வழங்குவதாக பிரதி விவசாயப் பணிப்பாளர் உறுதியளித்தார்.

# கிளிநொச்சியில் உள்ள மின்னியலாளர்களுக்கு தேசிய தொழிற்றகைமை மற்றும் மின்னியலாளர் உரிமம் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம்!





மின்னியலாளர்களுக்கான உரிமம் வழங்கும் முறை மற்றும் குறைந்தபட்சம் தேவையான தகுதிகளை வழங்கும் இலவச திட்டத்தை (தேசிய தொழிற்கல்வித் தகைமை மட்டம் 3, ஏேஞ 3) செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின்படி, மின்சாரத் தொழில்களை செய்யும் மின்னியலாளர்களுக்கு உரிமம் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

மின்னியலாளர்களுக்கு ஏேஞ - 3 சான்றிதழ்களை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டத்திற்காக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது, மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியல் சங்கம் ஆகியவை இந்த உரிம முறையை நடைமுறைப்படுத்துகின்றன. குறித்த உரிமம் வழங்கும் முறைமை இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது.

அதனடிப்படையில், 2026 ஆம் ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு பின்னர், மின்னியலாளர்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ள குறைந்தபட்சம் தேசிய தொழிற்கல்வித் தகைமை மட்டம் - 3 சான்றிதழை பெற்றிருக்க வேண்டும்.

2030 ஆம் ஆண்ட ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு பின்னர், மின்னியலாளர்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ள குறைந்தபட்சம் தேசிய தொழிற்கல்விச் சான்றிதழை (தகைமை மட்டம் - 4) பெற்றிருக்க வேண்டும்.

தற்போது தொழிலில் தேசிய தொழிற்கல்வித் தகைமை மட்டம் 3 (ஏேஞ 3) சான்றிதழ் இல்லாத மின்னியலாளர்களுக்காக இலவசமாக தேசிய தொழிற்கல்வித் தகைமை - மட்டம் 3 சான்றிதழை வழங்கும் திட்டம் 2021 முதல் நடைமுறையிலுள்ளது.

இந்த நிகழ்ச்சியின் மற்றொரு கட்டம் மே மாதம் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கான திகதி மற்றும் இடம் ஆகியன பின்னர் அறிவிக்கப்படும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மின்னியலாளர்களுக்கான இலவசமான இத்திட்டத்தில், 18 மாதங்களுக்கும் அதிகமான தொழில் அனுபவம் உள்ள மின்னியலாளர்களுக்கு இலவச ஏேஞ 3 பதிவு மற்றும் விழிப்புணர்வு வழங்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உதவியுடன் அந்தந்த பிரதேச செயலகங்களுக்குட்பட்ட மின்னியலாளர் தொழிலை முழு நேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ மேற்கொள்ளும் அனைத்து மின்னியலாளர்களுக்கும் இது தொடர்பில் விழிப்புணர்வை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகக்கு முன்னர், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மின்னியலாளர்கள் தத்தமது பிரதேச செயலகங்களில் உள்ள திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தொடர்பு கொண்டு விவரங்களை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் (02)

# 15 சதவீதம் பேர் ஆஸ்துமா அறிகுறிகளுடன் உள்ளனர்




நாட்டின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 15 சதவீதம் பேர் ஆஸ்துமா தொடர்பான அறிகுறிகளைக் கொண்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உலக ஆஸ்துமா தினம் மே 7 அன்று அனுஷ்டிக்கப்படவுள்ளதையொட்டியே இந்த ஆய்வு விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இருப்பினும், ஆஸ்துமா நோயானது முறையாக கட்டுப்படுத்தக்கூடிய ஒரு நோயாகும் என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். ஆஸ்துமா காரணமாக உலகளவில் வருடத்திற்கு சுமார் 5 லட்சம் பேர் மரணமடைவதாக தெரிவிக்கப்படுகின்றது. முறையான மருத்துவ ஆலோசனைகளை மேற்கொள்வதன் மூலம் ஆஸ்துமாவைத் தடுக்க முடியும் என இலங்கை சுவாச நோய் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் டொக்டர் நெரஞ்சன் திஸாநாயக்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெசி-134)

# நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தொழிலாளர்களின் பங்களிப்பு மகத்தானது!

## எம்.எஸ் தௌபீக் எம்.பி கருத்து



நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தொழிலாளர்களின் பங்களிப்பு மகத்தானது எனவும் இந்நாளில் எனது இதயங்கனிந்த மே தின நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன், என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ் தௌபீக் அவரது மே தின வாழ்த்து அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

உடலினை இயந்திரமாக்கி, உழைப்பினை உரமாக்கி, உலகத்தை இயங்க வைப்பவர்களே தொழிலாளப் பெருமக்கள். அவர்கள் வருடத்தில் ஒருநாள் மட்டுமே நினைத்துப் போற்றப்பட வேண்டியவர்கள் அல்ல. வருடம் முழுவதும் நினைத்துப் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

எமது நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு பிற்பாடு தொழிலாளர்கள் பல்வேறு நெருக்கடிகளை சந்திக்கவேண்டிய நிலையை எதிர்நோக்கியிருக்கின்றனர். நாம் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்தும் போராடியிருக்கிறோம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸானது தொழிலாளர் நலனுக்காக எப்போதும் குரல்கொடுக்கும் என்பதோடு, தொழிலாளர் வாழ்வில் முன்னேற்றமும், நிம்மதியும் காண அயராது பாடுபடும் இயக்கம் என்பதை உழைப்பாளர் சமுதாயம் நன்கு அறியும்.

உழைப்பாளர்களது எதிர்பார்ப்புக்கள் நிறைவேறவும், அவர்களது குடும்பங்களில் மகிழ்ச்சி, வெற்றி பெருகவும் பிரார்த்திக்கிறேன், என்றும் அவரது வாழ்த்து அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் பொருளாதாரம் இந்த வருடம் 3 வீதத்தால் வளர்ச்சியடையும் என கணிப்பு

## மத்திய வங்கியின் வருடாந்த பொருளாதார மீளாய்வில் தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதாரம் இவ்வருடம் (2024) 03 வீதத்தால் வளர்ச்சியடையும் என இலங்கை மத்திய வங்கி கணித்துள்ளது. புதிய மத்திய வங்கிச் சட்டத்தின்படி முதன்முறையாக வெளியிடப்பட்ட மத்திய வங்கியின் வருடாந்த பொருளாதார மீளாய்வில் (2023) இவ்வாறு கூறப்பட்டுள்ளது. நிதிக் கொள்கை தளர்வு மற்றும் குறைந்த பணவீக்க சூழலின் பலன்கள் பொருளாதாரத்திற்கு சாதகமாக அமைத்துள்ளமையின் காரணமாகவே மேற்படி பொருளாதார வளர்ச்சி பதிவாகும் என எதிர்பார்ப்பதாகவும், கடந்த ஆண்டு (2023) பொருளாதாரம் 2.3 சதவீதம் வீழ்ச்சி நிலையில் இருந்தது எனவும் மேற்படி மீளாய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்து கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பின்னடைவிலிருந்த பொருளாதாரம், 2023 ஆம் ஆண்டின் பின்னிறுதி ஆறு மாதங்களில் நேர்மறையான பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாகவும், இந்த பொருளாதாரச் செயல்திறன் மற்றும் பொருளாதார வளர்ச்சி எதிர்வரும் காலத்திலும் தொடரும் எனவும் வருடாந்த பொருளாதார மீளாய்வில் (2023) மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இனிமேல், மத்திய வங்கியின்வருடாந்த அறிக்கைக்குப்பதிலாக, இதே போன்று வருடாந்த பொருளாதார மீளாய்வே தொடர்ந்து வெளியிடப்படும் என அறிவிக கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெசி-133)

# வீசா கட்டணங்களில் மாற்றமானது சகல கட்சிகளினதும் சம்மதத்துடனேயே கடந்த வருடம் நிறைவேறியிருந்தது!

## இன்று எதிர்க்கட்சிகள் எதிர்ப்பது ஆச்சரியமாய் உள்ளது என்கிறார் அமைச்சர் டிரான் அலஸ்

புதிய வீசா கட்டணங்களில் மாற்றமானது ஆளும் கட்சி மற்றும் மற்றும் எதிர்க்கட்சிகளின் இணக்கப்பாட்டுடனேயே கடந்த வருடம் நாடாளுமன்றத்தில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

இந்த விசா கட்டணத் திருத்தம் 2023 நொவம்பர் 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதையும், அதனை உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக்கொண்டதையும் நினைவுகூர்ந்த அமைச்சர், அன்று அதற்கு ஒப்புதல் வழங்கிய எதிர்க்கட்சிகள் இன்று எதிர்ப்பது குறித்து ஆச்சரியம் வெளியிட்டார்.

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் உட்பட பெருமளவிலான மக்களிடமிருந்து விசா பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டதாகவும், அதற்கமையவே அவர்களுக்கு விசாக்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(ரெசி-132 )

# பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாடசாலையில் பாராட்டு விழா



(எம்.ஏ.ஏ.அக்தார்)

பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாடசாலையில் கடந்த திங்கட் கிழமை நடைபெற்ற பாராட்டு விழாவில் கணித ஒலிம்பியாட் போட்டியில் சர்வதேசப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட என்.அல்ஹர் தானியல்,தேசிய போட்டியில் பங்குபற்றிய எஸ்.எம். சஹ்தான் சம்தி மற்றும் தேசிய மாணவர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட எம்.ஆர்..அம்ரி அகமட் ஆகிய மாணவர்களும் பயிற்றுவித்த ஆசிரியர் எஸ்.சசிகுமார் அவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு அதிபர் கே.எல்..உபைத்துல்லா தலைமையில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.எம்.. சித்தி பாத்திமா,கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம். எச்..றஸ்மி,உதவிக் கல்விப் பணிப்பாளர்(கணிதம்) எம். நாகூர்த்தம்பி மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் சிறப்பாக நடைபெற்றது.

# திருப்பழுகாமம் சூட்டிங் ஸ்டார் விளையாட்டு கழகத்தின் சித்திரைப் புத்தாண்டு விழா

மட்டக்களப்பு, திருப்பழுகாமம் சூட்டிங் ஸ்டார் விளையாட்டு கழகத்தினது சித்திரைப் புத்தாண்டு கலாசார விளையாட்டு விழா பட்டிருப்பு பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் பாரம்பரிய விளையாட்டுக்களில் பலரும் கலந்துகொண்டு பரிசில்களைப் பெற்றனர்.



# புத்தளத்தில் இடம்பெற்ற "நினைவுகளில் உஸ்தாத் முனீர்" நூல் வெளியீட்டு விழா



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மர்ஹூம் அஷ்ஷெய்க் எம். எச்.எம்.முனீர் அவர்களது நினைவுகளை சுமந்து வரும் "நினைவுகளில் உஸ்தாத் முனீர்" என்ற நூல் வெளியீட்டு விழா நேற்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியின் "அஷ்ஷெய்க் சாமில்" கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

உஸ்தாத் முனீர் அவர்களின் மறைவையொட்டி சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட அனுதாப செய்திகளின் தொகுப்பாக இந்த நூல் வெளி வந்துள்ளது.

இந்த நூலினை புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி நிர்வாகம், கல்வி மேம்பாட்டுக்கும் சீர்திருத்தத்துக்குமான புத்தளம் கல்வியியலாளர்களின் மன்றம் (பில்லர்ஸ்), உஸ்தாத் முனீர் அவர்களது நண்பர்கள் வட்டம் ஆகியன இணைந்து வெளியிட்டு இருந்தன.

நிகழ்வில் வரவேற்பு உரையினை புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியின் முகாமைத்துவ சபை தலைவர் எச். அஜ்மலும், தலைமை உரையினை பில்லர்ஸ் அமைப்பின் தலைவர் ஓய்வு நிலை பிரதிக் கல்வி பணிப்பாளர் இஸட். ஏ.சன்ஹீரும் நிகழ்த்தினர்.

ஆய்வுக்கும் ஆவணப்படுத்தலுக்குமான எம்.ஐ.எம்.மொஹிதீன் நிலையத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி

எழுத்தாளர், ஆய்வாளர் சிறாஜ் மசூர், புத்தளம் கல்விப் பணிமனையின் ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர் ஏ.என்.எம்.எப். ரிஸ்கியா ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர்.

நூலின் முதல் பிரதியை நூலினை வெளியிட்டு வைத்த அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து உஸ்தாத் முனீர் அவர்களின் சகோதரரும், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி தலைவருமான அஷ்ஷெய்க் உசைர் (இஸ்லாஹி) இடம் வழங்கி வைத்தனர்.

தொடர்ந்து அவரது குடும்ப உறவினர்களாலும், பில்லர்ஸ் அங்கத்தவர்களாலும் வருகை தந்த அதிதிகளுக்கு நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் ஏற்புரையை உஸ்தாத் முனீர் அவர்களின் குடும்ப உறுப்பினர் சட்டத்தரணி பஸ்லுர ர/ஹமானும், குடும்பம் சார்பான சிற்றுரையை அவரது மகள் நஹ்பா சாரா முனீரும், முடிவுரையை மேர்ஸி லங்கா கருத்திட்ட பணிப்பாளர் அஷ்ஷெய்க் முனாசும் நன்றி உரையினை பில்லர்ஸ் செயலாளர் டீ.ரினாஸ் முஹம்மதும் நிகழ்த்தினர்.

பில்லர்ஸ் அங்கத்தவர் எஸ்.எம்.எம்.மபாஸ் நிகழ்வினை சுவைபட தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் ஓய்வு நிலை பிரதி கல்விப் பணிப்பாளர் இசட். ஏ. சன்ஹீர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம்.நவவி, புத்தளம் பதில் நீதவானும், சிரேஷ்ட சட்டத்தரணிமான எம்.எம். இக்பால், புத்தளம் கோட்ட கல்வி பணிப்பாளர் ஏ.அஸ்கா, புத்தளம் முன்னாள் நகர பிதா எம். என்.எம்.நஸ்மி, புத்தளம் இந்து மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ்.நாகராஜா உள்ளிட்ட கல்வியியலாளர்கள், சமூகவியலாளர்கள், நலன் விரும்பிகள், இஸ்லாஹிய்யா மாணவிகள், முனீர் உஸ்தாதின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்



# சிட்னியில் களைகட்டிய சித்திரைத்திருநாள் விழா

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு அவுஸ்திரேலியா மக்கள் ஒன்றியம் (ஒஸ்கார்) தமிழர் பாரம்பரியத்தோடு நடத்திய சித்திரைத் திருநாள் பெருவிழா நேற்று முன்தினம் (28) ஞாயிற்றுக்கிழமை சிட்னி லிட்டன் ஸ்ட்ரீட் பார்க் மைதானத்தில் நடைபெற்றது.

ஒஸ்கார் அமைப்பின் நடப்பாண்டுத் தலைவர் கந்தசாமி பத்மநாதன் தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

அதிதிகளாக ஒஸ்கார் அமைப்பின் போசகர்களான சிட்னியில் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை நிறுவிய உதயசூரியன் நாகமணி குணரெட்ணம், முன்னாள் பட்டயக் கணக்காளர் ரி.பிரகதீஸ்வரன், முன்னாள் பொறியியலாளர் எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுக்களில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பங்குகொண்டு பரிசுகளைப் பெற்றுக்கொண்டனர்.



# தொழிலாளர் விடுமுறைக்காக கல்முனை சந்தை மூடப்படும்!




(அஸ்லம் எஸ்.மௌலானா)

உலகளாவிய ரீதியில் தொழிலாளர்களுக்கான விடுமுறை நாளாக அனுஷ்டிக்கப்படுகின்ற மே தினத்தன்று கல்முனை மாநகர பொதுச் சந்தையை முழுமையாக மூடுவதற்கு இப்பொதுச் சந்தை வர்த்தக சங்கம் தீர்மானித்திருப்பதாக சங்கத்தின் செயலாளர் ஏ.எல். கபீர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் முக்கிய பொருளாதார மையமாகத் திகழ்கின்ற கல்முனை மாநகர பொதுச் சந்தையின் வரலாற்றில் தொழிலாளர் சுதந்திர தினத்தை மையப்படுத்தி சந்தையை முழுமையாக மூடி தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்கப்படுவது இதுவே முதன்முறையான சந்தர்ப்பமாகும்.

கடந்த காலங்களில் இந்தச் சந்தையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மே தினத்தன்று விடுமுறை வழங்கப்படாமல் இருந்து வந்தமை அவர்கள் மத்தியில் மிகவும் கவலையை ஏற்படுத்தியிருந்தது. இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு இம்முறை அவர்களது உரிமைகளுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்பளித்து இச்சந்தையை முழுமையாக மூடி, அனைத்து வியாபார நடவடிக்கைகளையும் இடைநிறுத்துவதற்கு சந்தை வர்த்தக சங்கம் தீர்மானித்துள்ளது.

ஆகையினால் இச்சந்தையின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற தொழிலாளர்களுக்கு விடுமுறை அளிப்பதற்காக கல்முனை மாநகர பொதுச் சந்தையில் தொழில் புரியும் முதலாளிமார் இத்தினத்தன்று தமது வர்த்தகத் தளங்களை திறக்காமல் ஒத்துழைப்பு வழங்குமாறு சந்தை வர்த்தக சங்கம் வலியுறுத்துக் கேட்டுக் கொள்கிறது, என்று அவர் மேலும் தெரிவித்தார்.








## முல்லைத்தீவு மாவட்ட ஒட்டிசுட்டான் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இவ் ஆண்டிற்கான இரண்டாவது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் அவர்களின் நெறிப்படுத்துதலில் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கௌரவ காதர் மஸ்தான் அவர்களின் தலைமையில் ஒட்டுசுட்டான் பிரதேசச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

குறித்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் போக்குவரத்து, விவசாயம், நீர்ப்பாசணம்,மின்சாரம், சுகாதாரம், கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சினால்முன்னெடுக்கப்படுகின்ற வாழ்வாதாரத் திட்டங்கள் மற்றும் இன்னும்பல முக்கியமான விடயங்கள் பற்றி கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

இப்பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் திணைக்கள தலைவர்கள், அரச பதவிநிலை உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்,பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## பாலமுனை, அல் ஹிக்மா பாடசாலை அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல்

(கே எ ஹமீட்)

பாலமுனை, அல் ஹிக்மா பாடசாலை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று (29) இடம்பெற்றது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் முக்கிய பிரமுகர்களும் பங்கேற்றனர். குறித்த பாடசாலையின் பௌதீக தேவைகளை அறிந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், விரைவில் அவற்றுக்கு தீர்வுகளை வழங்குவதாக உறுதியளித்தார்.

## பயணப் பையில் கசிப்பு கடத்தி வந்த இருவர் மடக்கிப் பிடிப்பு

யாழ்ப்பாணத்துக்குப் பயணப் பையில் கசிப்பு கடத்தி வந்த இருவர் தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த அரச பஸ்ஸில் கசிப்பு கடத்தப்படுகின்றது எனத் தர்மபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக பஸ்ஸை மறித்துப் பொலிஸார் சோதனை செய்தனர். இதன்போது 45 லீற்றர் சிப்புடன் சந்தேகநபர் இருவரைக் கைது செய்ய முற்பட்டபோது ஒருவர் தப்பிச் செல்ல முயற்சித்த வேளை பொலிஸார் அவரையும் துரத்திப் பிடித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் சூட்சுமமான முறையில் பயணப் பொதியில் கசிப்பைப் பொதி செய்து எடுத்துச் சென்றமை தெரியவந்துள்ளது.

இரண்டு சந்தேகநபர்களிடமும் தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.04.2024இல் வெளியிடப்பெற்றது.